

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களின் 22வது நினைவு நாளையொட்டி வேலூர் வடக்கு மாவட்ட திமுக சார்பில் , கே.வி.குப்பம் ஒன்றிய திமுக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவ படத்திற்கு வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் மலர் மாலை அணிவித்து மலர்த்தூவி மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றியக் கழக செயலாளர்கள் லோ.ரவிசந்திரன், சீதாராமன், முருகேசன், ஒன்றிய கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்



முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு வாணியம்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரின் திருவுருவப் படத்திற்கு திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், ஆலங்காயம் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் வி.ஜி.அன்பு, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எம்.சிங்காரவேலன், மாவட்ட பிரதிநிதி சி.சிவகுமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி.எஸ்.கார்த்திக் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

### நவ. 27 – இளைஞர் எழுச்சி நாளையொட்டி – நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில்

# பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - 100 நலஉதவி நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், நவ. 24 -

நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாளையொட்டி நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவது மற்றும் 100 நலத்திட்ட நிகழ்ச்சிகள் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகர் கலைஞர் அறிவாலயம் இனமான பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணி மாறன் தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் ராணி, மாவட்ட துணை செயலாளர்கள் நலங்கிள்ளி, ராணி பெரியண்ணன், பொருளாளர் ஏ.கே.பாலசந்திரன், தலைமச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர், துணை மேயர் பூபதி, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த் சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அசோக்குமார், ராமசுவாமி , நவலடி, பழனிவேல், ஜெகநாதன், பாலசுப்பிரமணி, செந்தில் முருகன், எம்.பி.கௌதம், ஜெயபிரகாஷ், ஆர்.எம்.துரைசாமி,

பேரூர் செயலாளர்கள் தனபாலன், முருகேசன், செல்லவேல், சுப்பிரமணி, ஜெயக்குமார் பொன்.நல்லதம்பி பழனியாண்டி, அன்பழகன், கண்ணன், ராஜேஷ் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் பொன் சித்தார்த், கிருபாகரன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், நகர்மன்ற,பேரூர் மன்ற தலைவர்கள் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக நாமக்கல் கிழக்கு மாவட்டம் ஒன்றிய, நகர, பேரூர்களில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நவம்பர் 27ம் தேதி அன்று பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்படும்.

ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் மாவட்ட சார்பு அணிகள் சார்பாக நவம்பர் 27 மற்றும் 28 ஆகிய நாட்களில் ஆதரவற்றோர் இல்லத்திற்கு உணவு வழங்குதல், விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவ செல்வங்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல், தூய்மை காவலர்களுக்கு மதிய உணவு வழங்குதல், கழக மூத்த முன்னோடிகளுக்கு வேட்டி வழங்குதல், போன்ற 100 இடங்களில் நலத்திட்ட நிகழ்ச்சிகள் மற்றும் கழக கொடி ஏற்றி சர்க்கரை பொங்கல் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### ஜி.ஆர்.திருமலை தலைமையில் பூவிருந்தவல்லி நகர தி.மு.க. சார்பில்

# 17 வது வார்டு கழக முன்னோடி கே.பி.விஜயராகவன் 100 வது ஆண்டு பிறந்தநாள் விழா!

## அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தங்க சங்கிலி வழங்கி வாழ்த்து!

திருவள்ளூர் நவ 24;

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகர திமுக 17ஆவது வார்டு முன்னாள் அவைத்தலைவர் கட்சியின் மூத்த முன்னோடி பி. கே. விஜயரங்கத்தின் 100வது ஆண்டு பிறந்த நாள் விழா பூந்தமல்லி நூலகம் அருகே நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் நடைபெற்றது.

நகர நிர்வாகிகள் ஷாஜகான், ஆனந்தபாபு, துளசிராமன், கேசவன், சரவணன், நந்தகுமார் ஆகியோர் வரவேற்றுப் பேசினர். நகர்மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் ஸ்ரீதர், அவைத்தலைவர் தாஜுதீன், நிர்வாகிகள் துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர்மன்னன், அசோக்குமார், லயன் சுதாகர், புண்ணியகோட்டி, ப.அன்பழகன், சௌந்தர்ராஜன், அ.ராஷிக், சு.அன்பழகன், ஜெயசீலன், விமல்ஆனந்த், நித்யானந்தம், பன்னீர்செல்வம், செழியன், துரையரசன், மணி, ஏழுமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், பூந்தமல்லி ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்கள். அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் விஜயரங்கத்திற்கு தங்கச் செயினை அணிவித்தார்.

பின்னர் விஜயரங்கம் கேக் வெட்டி தனது 100வது பிறந்த நாளை கொண்டாடினார்.

இதில் அமைச்சர் ஆவடி நாசர் பேசியதாவது: விஜயரங்கம் பெரியார் இயக்கம் தொடங்கியதிலிருந்தும், திமுக ஆரம்பித்ததிலிருந்தும் தொடர்ந்து கட்சிக்காக பாடுபட்டு வருகிறவர். திமுகவை குடும்ப கட்சி என்பார்கள். இதுதான் குடும்ப கட்சி. திமுகவினர் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல இருப்பார்கள். அதனைத்தான் பேரறிஞர் அண்ணா, ஒரு தாயின் வயிற்றில் எல்லாரும் பிறக்க முடியாது என்பதால்தான் பல தாய்களின் வயிற்றில் பிறந்துள்ளோம். நாம் அனைவரும் ஒரே குடும்பத்தினர் என்று கூறுவார். கரடு முரடான ஒத்தையடி பாதையாக இருந்த கழகத்தை தார்சாலையாக அமைத்தவர்கள் மூத்த முன்னோடிகள். அவர்களால் தான் இந்த இயக்கம் இந்த அளவுக்கு வளர்ந்துள்ளது.

கருணாநிதிக்கு துரோகம் செய்தார் எம்ஜிஆர். எம்ஜிஆருக்கு துரோகம் செய்தார் ஜெயலலிதா. ஜெயலலிதாவிற்கு துரோகம் செய்தவர் சசிகலா. சசிகலாவிற்கு துரோகம் செய்தவர் எடப்பாடி பழனிச்சாமி. பழனிச்சாமிக்கு துரோகம் செய்தவர் பன்னீர்செல்வம். அந்தக் கட்சியில் துரோகம் என்று வாழையடி வாழையாக வரும். துரோகத்தின் உச்சகட்டம் அதிமுக.

தற்போது அதிமுகவில் ஒருவராவது எம்ஜிஆர், ஜெயலலிதா பெயரை சொல்கிறார்களா. தங்களை மட்டும் முன்னிலைப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட அவைத் தலைவர் ம.இராஜி, ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், திமுக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான திமுகவினர், விஜயரங்கத்தின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

# கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் !

## மாவட்டப் கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் அறிக்கை !

கோவை,நவ.23-



கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் 24.11.2025 திங்கட்கிழமை இன்று காலை 10.00 மணியளவில் வடகோவை குறுக்குவெட்டு சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்ட அவைத்தலைவர், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கோவை மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், பகுதி கழக பொறுப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று தங்களை அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

பொருள் :

1. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோவை வருகை குறித்து,

2. தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்து,

3.கழக ஆக்கபணிகள் குறித்து★,

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களாம்பாக்கம் எம்.பன்னீர்செல்வம் தகப்பனாரும் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான முருகேசன் இயற்கை எய்தினார். தகவல் அறிந்து அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.மகாலிங்கம்உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சென்னை நுங்கம்பாக்கம், எம்.ஓ.பி வைஷ்ணவா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ”நம்ம லிட்டில் ஹீரோஸ்– 2025 என்ற நிகழ்ச்சியில் உர்பேசர் சுமித் நிறுவனத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தில் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி (LAPTOP) பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார் வழங்கினார்.

### மாநகராட்சி சார்பில் 65,422 விவரங்கள் பதிவு செய்யப்பட்டு,

# 24,477 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது!

## சென்னை மாநகராட்சி தகவல்!

சென்னை,நவ.24-

பெருநகர சென்னை மாநகராட்சியில் தெருநாய்கள் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்திடும் வகையில் அவற்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல், வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்துதல், மைக்ரோசிப் பொருத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், தெருநாய்கள் மற்றும் செல்லப்பிராணிகளுக்கு (நாய்கள் மற்றும் பூனைகள்) மைக்ரோசிப் செலுத்துதல், வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி செலுத்துதல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த மேலாண்மைக்காக மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை பெருநகர சென்னை மாநகராட்சியில் மாண்புமிகு மேயர் அவர்களால் 03.10.2025 அன்று தொடங்கப்பட்டது. இந்த இணையதள சேவையானது, செல்லப் பிராணிகள் மற்றும் தெருநாய்களின் தடுப்பூசி விவரங்கள் மற்றும் மீண்டும் அடுத்த தவணை தடுப்பூசி செலுத்த வேண்டிய தேதிகளை திறம்பட கண்காணிக்க உதவுகிறது.

செல்லப்பிராணிகளுக்கு ஆண்டுதோறும் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தவும், இந்த தடுப்பூசி செலுத்தப்பட்ட நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு மட்டும் உரிமம் செல்லத்தக்கது என்பதை உறுதிப்படுத்தி மீண்டும் உரிமம் புதுப்பிக்கப்படுவதை உறுதி செய்யவும், செல்லப்பிராணிகள் கைவிடப்படுவதை (Pet Abandonment) தடுப்பதற்காகவும் செல்லப்பிராணிகளுக்கு மைக்ரோ சிப் செலுத்தி உரிமம் பெறுவது பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த மைக்ரோ சிப்பில் செல்லப்பிராணிகளின் உரிமையாளரின் பெயர், முகவரி உள்ளிட்ட தரவுகள் பதிவு செய்யப்படும்.

செல்லப்பிராணிகளுக்கான மைக்ரோசிப் பொருத்தும் பணி அனைத்தும் தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பேரவையில் (Tamilnadu State Veterinary Council) பதிவுசெய்யப்பட்ட கால்நடை மருத்துவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதள மென்பொருளில் பட்டியலிடப்பட்டுள்ள தனியார் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகளிலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் செல்லப்பிராணிகளுக்கான மருத்துவமனைகளிலும் மேற்கொள்ளப்படுகிறது.

செல்லப்பிராணிகள் வளர்ப்பவர்களின் வசதிக்காகவும், உரிமம் பெறுவதற்கும், வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்தி, செல்லப் பிராணிகளுக்கு மைக்ரோசிப் பொருத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல் உள்ளிட்ட சேவைகள் 08.10.2025 அன்று முதல் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் செல்லப் பிராணிகள் சிகிச்சை மையங்களிலும், நாய் இனக்கட்டுப்பாட்டு மையத்திலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் இதுவரை 65,422 செல்லப்பிராணிகள் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, 24,477 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

செல்லப் பிராணிகள் உரிமையாளர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில், இணையதள சேவையில் காணப்பட்ட இடர்பாடுகள் களையப்பட்டு எளிதாக உரிமம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், செல்லப்பிராணிகள் உரிமையாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் செல்லப்பிராணிகளுக்கான உரிமம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட 23.11.2025 என்ற காலக்கெடுவானது, தற்போது 07.12.2025 வரை மேலும் 14 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் திரு.வி.க. நகர், புளியந்தோப்பு, லாயிட்ஸ் காலனி, நுங்கம்பாக்கம், கண்ணம்மாப்பேட்டை, மீனம்பாக்கம் ஆகிய 6 செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்களிலும், சோழிங்கநல்லூர் நாய் இனக்கட்டுப்பாட்டு மையத்திலும் மைக்ரோசிப் பொருத்துதல், வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்துதல், உரிமம் வழங்குதல் உள்ளிட்ட சேவைகள் ஞாயிற்றுக்கிழமை உட்பட வாரத்தின் அனைத்து நாட்களிலும் தினசரி காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை மேற்கொள்ளப்படும்.

எனவே, செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் இதனைப் பயன்படுத்தி 07.12.2025க்குள் தங்களின் செல்லப் பிராணிகளுக்கான உரிமத்தைப் பெற்றிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.





தாம்பரம் மாநகரம் செம்பாக்கம் தெற்கு பகுதிக்குட்பட்ட,பாக நிலை முகவர்கள் (BLA–2) பாக மின்னனு முகவர்கள் (BDA) பாக இளைஞர் அணி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது இதில் தாம்பரம் மாநகர செயலாளர், எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் பரிதி.இளம்சுருதி எம்சி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்ச்சியில் செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ் அவர்களும் பகுதி கழக நிர்வாகிகள்,வட்ட செயலாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள், BLA–2, BDA, BLC, பாக இளைஞர் அணியினர் மற்றும் கழக தோழர்கள் பங்கேற்றனர்.